பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை
ප්‍රාදේශීය සෞඛ්‍ය සේවා අධ්‍යක්ෂ කාර්යාලය
**Office of the Regional Director of Health Services**

முல்லைத்தீவு | මුලතිව් | Mullaitivu

எனது இல / මගේ අංකය / My No: NP/04/44/02/07/02.
உமது இல / ඔබගේ අංකය / Your No
திகதி / දිනය / Date: 02.03.2009

அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
முல்லைத்தீவு.

## பட்டினிச்சாவு தொடர்பானது.

மேற்படி விடயம் தொடர்பாக,
தற்போது ஏற்பட்டுவரும் யுத்தம் காரணமாக மக்கள் பட்டினிச்சாவினை எதிர்நோக்கி வருகின்றார்கள் என்பது தாங்கள் அறிந்ததே. கடந்த சில நாட்களாக எமது வைத்தியசாலைக்கு பட்டினிச் சாவினால் 13 பேரது உடலங்கள் இறந்த நிலையில் கொண்டுவரப்பட்டன. அவர்களில் 05பேரின் பொது விபரங்கள் அறியப்பட்டுள்ளது. அத்துடன் உணவுப்பொருட்களின் விலையேற்றம், உணவுப்பொருட்களை பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை ஆகியவற்றால் பெரும்பாலான மக்கள் பழக்கப்படாத இலை குழைகளினையும் பழக்கப்படாத உணவுப் பொருட்களையும் உண்கின்றனர். இவ்வாறு பழக்கப்படாத இலை வகைகளை சமைத்து உண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 06 பேர் வாந்தி எடுத்து மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இவர்களின் விபரம் வருமாறு.

**இறந்தவர்களின் விபரம்.**

| இல | பெயர் | பால் | வயது |
|---|---|---|---|
| 01. | பொன்னையா தர்மலிங்கம் | ஆண் | 65 |
| 02. | பொன்னுச்சாமி இரட்ணேஜ்வரி | பெண் | 65 |
| 03. | எஸ். ஜெயந்தினி | பெண் | 17 |
| 04 | சந்தனம் விசாலட்சுமி | பெண் | 72 |
| 05. | ஆறுமுகம் இராசையா | ஆண் | 66 |

**பழக்கப்படாத இலைவகைகளை சமைத்து உண்டு பாதிக்கப்பட்வர்களின் விபரம்**

| இல | பெயர் | பால் | வயது |
|---|---|---|---|
| 01. | சின்னத்தம்பி வசந்தபாலன். | ஆண் | 46 |
| 02. | வசந்தபாலன் பத்மாதேவி | பெண் | 38 |
| 03. | வசந்தபாலன் பவித்திரன் | ஆண் | 14 |
| 04. | வசந்தபாலன் சத்தியா | பெண் | 13 |
| 05. | வசந்தபாலன் சமர்வேந்தன் | ஆண் | 08 |
| 06. | வசந்தபாலன் கீர்திகா | பெண் | 06 |

இவற்றினைத் தவிர்க்கும் முகமாக,

01. பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலையினை நிர்ணயித்தல்.
02. குறிப்பிட்ட இடங்களில் வைத்து உணவினை விநியோகத்தில்.
03. மக்களுக்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.

ஆகியவற்றை மேற்கொள்வதால் மேலும் பட்டினிச்சாவை தவிர்க்கமுடியும் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

வைத்திய கலாநிதி து.வரதராஜா,
பி.சு.சே.பணிப்பாளர்,
முல்லைத்தீவு.

Dr. T. Varatharajah
Regional Director of
Health Services
Mullaitivu.

பிரதி:

01. செயலாளர், சுகாதார அமைச்சு கொழும்பு.
02. மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், வட மாகாணம், திருகோணமலை.
03. இணைப்பாளர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், முல்லைத்தீவுக் கிளை.
04. Dr.ஜெகநாதன் சுகாதார இணைப்பாளர் வடக்கு கிழக்கு மாகாணம்.
05. மேன்மை தங்கிய அமைச்சர் இசார்த் பதியுதீன்
06. இணைப்பாளர், உலக உணவு திட்டம், வவுனியா
07. இணைப்பாளர், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம். வவுனியா.